**செ.வெ.எண்.63** **நாள்.28.03.2017**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வங்கிகள் திறனாய்வுக் கூட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய வங்கியாளர்களுக்கு கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில், மாவட்ட வங்கிகள் திறனாய்வுக் கூட்டம் இன்று (28.03.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில், சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களை உருவாக்கு நோக்கில் வங்கிகளின் ஒத்துழைப்போடு மாவட்டத் தொழில் மையம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் முத்தான மூன்று திட்டங்கள் முறையே படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பாரத பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தலைமுறை தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையின் கீழ் 28.03.2017-ல் நடந்த மாவட்ட வங்கிகள் திறனாய்வு கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.மு.கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் சிறப்பாக பங்காற்றியமைக்காக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சிப்காட் பேட்டை கிளை மேலாளருக்கும், பாரத பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் சிறப்பாக பங்காற்றியமைக்காக சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, அம்பாசமுத்திரம் கிளை மேலாளருக்கும் மற்றும் புதிய தலைமுறை தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்பாக பங்காற்றியமைக்காக கார்ப்பரேசன் வங்கி, அடையன்காரன்குளம் கிளை மேலாளருக்கும் கேடயங்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு.சுசில் சந்திர மொகந்தா, ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் திரு.ஏ.ராம்குமார், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு.கே.ராமலிங்கம், முன்னோடி வங்கி மேலாளர் திரு.எஸ்.அழகர்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.செச்தி லீமா அமலின், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.ஞானசேகரன், மேலாளர் (கடன் வசதி) திரு.மணிகண்டன், உதவி பொறியாளர் திரு.ராமச்சந்திரன் மற்றும் வங்கியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.